[1970 நவம்பர் 28

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) சென்னை மாநகரில் ஏற்கனவே உள்ள துப்பாக்கிச் சுடும் பயிற்சி நிலையங்களைத் தவிர வேறு எதுவும் தொடங்க உத்தேசம் எதுவும் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Mylapore Hindu Permanent Fund

* 47 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon the Minister for Labour and Backward Classes be pleased to state—

(*a*) whether there were any labour troubles in the Mylapore Hindu Permanent Fund during the early months of 1970;

(*b*) if so, he details thereof; and

(*c*) the action taken thereon?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) தொழிலாளர்களால் எந்தத் தொழில் தகராறும் எழுப்பப்படவில்லை. தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளுக்கு எந்தப் புகார்களும் அல்லது முறையீடுகளும் செய்து கொள்ளப்படவில்லை.

(இ) & (உ) இவ்வினாக்கள் எழவில்லை.

திருமங்கலம் பேரூராட்சி.

* 48 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு உணவு, உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் பேரூராட்சி, நகராட்சியாக உயர்த்தப் படுமா?

(இ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) திருமங்கலம் பேரூராட்சியை ஓர் நகராட்சியாக மாற்றும் ஓர் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்தது. ஆனால் மத்திய அரசின் மக்கட் தொகை கணக்கெடுப்பு அலுவலகம் தற்போது மக்கட் தொகை சம்பந்தப்பட்ட வேலைகளுக்காக ஓர் தடை விதித்து இருப்பதால், மாநில அரசு உடன் செயலாற்ற வேண்டி இராததும், அவசியமற்றதுமான செயற்குறிப்புகளை, தள்ளிவைக்குமாறு மாநில அரசை கேட்டுக் கொண்டமையால், திருமங்கலம் பேரூராட்சியை ஓர் நகராட்சியாக மாற்றும் செயற்குறிப்பை, மாநில அரசு, தற்போதைக்கு தள்ளி வைத்துள்ளது. மத்திய அரசின் மக்கட்தொகை கணக்கெடுப்பு சம்பந்தப்பட்ட தடையை நீக்கின உடன் ஆவன செய்யப்படும்.

ரேஷன் கடை வியாபாரிகள்.

* 49 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உணவு, உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ரேஷன் விதிகள் சரிவரப் பின்பற்றப்படவில்லை என்ற காரணத்துக்காக 1969-ம் ஆண்டு, ஜனவரி முதல் இதுவரை எத்தனை ரேஷன் வியாபாரிகளது லைசென்ஸ் ரத்து செய்யப்பட்டுள்ளது?